
ஸ்ரீ:

# ஸ்ரீ ஹயக்ரீவ கவசம்
&
# ஸ்ரீ ஹயாஸ்ய கராவலம்பம்

(அதர்வ மந்த்ர காண்டம்)



ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவர்

வெளியீடு : ஸ்ரீ லக்ஷ்மி ஸரஸ் மாருதி ட்ரஸ்ட்,
ராமகிருஷ்ணா நகர், முத்தியால்பேட்டை, புதுச்சேரி -3.
போன் : 0413 - 2260096

ஸ்ரீமதே லக்ஷ்மி ஹயவதன பரப்ரஹ்மணே நம:

சதுர்வேதங்களில் அதர்வண வேதம் மந்திர பிரயோகங்களுக்குப் பிரசித்தமானது. அதர்வ மந்திர காண்டத்தில் "ஸாக்ஷாத் ஸ்ரீ ஹயக்ரீவனே உபதேசித்த ஒரு கவசம் காணக் கிடைக்கிறது. ஸ்ரீ ஹயக்ரீவனே எல்லா நிலைகளிலும் இருந்து இந்த கவசத்தை உபதேசித்தருளியது மிக அபூர்வமான ஒன்றாகும். நம்மை எப்போதும் எங்கும் காத்தருளக்கூடிய இந்த கவசத்தில் நம் புத்தி, ஜ்ஞானம், வித்யை இவைகளையும் காத்தருளுமாறு ப்ரார்த்திக்கப்படுகிறது, அரியதான விஷயமாகும். எந்த இடங்களில் ரக்ஷணம் இல்லாதிருப்போமோ, அங்கெல்லாம் அகில ஜகத் பிரபுவாகிய ரக்ஷகன் ரக்ஷித்தருள வேண்டும் என பிரார்த்திப்பதால், மக்களுக்கு தைரியமூட்டுகிறது. உலகெங்கும் ஆபத்துக்களும், உயிர்ப்பலிகளுமே மலிந்து நிற்கும் இன்றைய சூழலில் இது அருமருந்தாகக் கிடைத்துள்ளது. யாவரும் இதைப் படிக்க ஹேதுவாக சம்ஸ்கிருதத்திலும், தமிழிலும் தரப்படுகிறது.

மேலும் ஏதோ பிரச்சனைகளிலேயே அமிழ்ந்து அவதியுறும் நமக்கு, கைகொடுத்து, காப்பாற்றவேணும் என வேண்டி "கராவலம்பன துதி" தரப்பட்டுள்ளது. கருணைமிக்க பரிமுகன் கை கொடுத்து ரக்ஷிப்பான் என்பதில் ஐயமில்லை.

கடைசியாக ஸ்ரீவைகுந்தத்தை விட்டுக் கலிகால பிரத்யக்ஷ தெய்வமாக திருவேங்கடமுடையான் திருமலையில் எழுந்தருளியிருப்பது போல, கும்பகோணம் ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமி திருக்கோயில் மூலவர் ஸ்ரீ ஆராவமுதன் ஸ்ரீவைகுந்தத்திலிருந்து நேராக திருத்தேருடனேயே உத்தானசாயியாகக் காட்சி தருகிறார். நிவிருத்தி தர்மத்தின் மூல ஸ்வரூபமாகிய ஸ்ரீ பரிமுகன் திருமாமணி மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் நிலையிலிருந்து ஸ்ரீ ஆராவமுதனாக அவதரித்துள்ள பாங்கினை ஆழ்வார்கள் அனுபவமாக ஒரு பரிச்சயம் கட்டுரை வடிவில் உள்ளது. வாசக அன்பர்கள் படித்து மகிழுமாறு வேண்டப்படுகிறார்கள்.

சுபமஸ்து

இங்ஙனம்,
விஷ்ணு பிரியா

# श्री हयग्रीव कवचम्

अस्य श्री हयग्रीवकवच महामन्त्रस्य हयग्रीव ऋषिः।
अनुष्टुप् छन्दः।
श्री हयग्रीवः परमात्मा देवता।
ओं श्रीं वागीश्वराय नमः इति बीजम् ।
ओं क्लीं विद्याधराय नम इति शक्तिः।
ओं सौं वेदनिधये नम इति कीलकम् ।
ओं नमो हयग्रिवाय शुक्लवर्णाय विद्या मूर्तये ।
ओंकारायाच्युताय ब्रह्मविद्या प्रदाय स्वाहा।
मम हयग्रीवप्रसादसिद्ध्यर्थे जपे विनियोगः॥

ध्यानम्

कलशाम्बुधिसङ्काशं कमलायतलोचनम्।
कलानिधिकृतावासं कर्णिकान्तरवासिनम्॥ 1
ज्ञानमुद्राक्षवलय शङ्खचक्रलसत्करम्।
भूषाकिरण सन्दोह विराजितदिगन्तरम्॥ 2
वक्त्राब्ज निर्गतोद्दाम वाणिसन्तान शोभितम्।
देवतासार्वभौमं तं ध्यायेदिष्टार्थसिध्दये। 3
ओं हयग्रीवः शिरः पातु ललाटं चन्द्रमध्यगः।
शास्त्रदृष्टिर्दृशौ पातु शब्दब्रह्मात्मकः श्रुती ॥ 4
घ्राणं गन्धात्मकः पातु वचनं यज्ञसंभवः।
जिह्वां वागीश्वरः पातु मुकुन्दो दन्तसंहतिः॥ 5
ओष्ठं ब्रह्मात्मकः पातु पातु नारायणोऽधरम्।
शिवात्मा चिबुकं पातु कपोलौ कमलाप्रभुः॥ 6
विद्यात्मा पीठकं पातु कण्ठं नदात्मको मम।
भुजो चतुर्भुजः पातु करौ दैत्येन्द्रमर्दनः॥ 7

# அதர்வ மந்த்ர காண்டே
# ஸ்ரீ ஹயக்ரீவ கவசம்

அஸ்ய ஸ்ரீஹயக்ரீவ கவச மஹா மந்த்ரஸ்ய,
ஸ்ரீ ஹயக்ரீவ ரிஷி: | அனுஷ்டுப் சந்த: |
ஸ்ரீ ஹயக்ரீவ பரமாத்மா தேவதா |
ஓம் ஸ்ரீம் வாகீச்வராய நம: இதி பீஜம்|
ஓம் க்லீம் வித்யாதராய நம இதி சக்தி: |
ஓம் ஸௌம் வேதநிதயே நம இதி கீலகம்|
ஓம் நமோ ஹயக்ரீவாய சுக்லவர்ணாய வித்யா மூர்த்தியே|
ஓம் காராச்யுதாய பிரம்மவித்யா பிரதாய ஸ்வாஹா|
மம ஹயக்ரீவ பிரஸாத ஸித்யர்த்தே ஜபே விநியோக: ||

த்யாநம்

கலசா'ம்புதி ஸங்காசம் கமலாயத லோசனம்|
கலாநிதி க்ருதர வாஸம் கர்ணிகாந்தர வாஸினம்|| 1

ஜ்ஞான முத்ராக்ஷவலய சங்க சக்ர லஸத்கரம்|
பூஷாகிரண ஸத்தோஹ விராஜித திகந்தரம்|| 2

வக்த்ராப்ஜ நிர்கதோதாம வாணீஸந்தான சோபிதம்|
தேவதா ஸார்வபௌமம் தம் த்யாயேத் இஷ்டார்த்த
ஸித்தயே|| 3

ஓம் ஹயக்ரீவ சிர:பாது லலாடம் சந்த்ரமத்யக: |
சாஸ்த்ர த்ருஷ்டீர் த்ருசௌ பாது சப்த ப்ரஹ்மாத்மக: ச்ருதீ|| 4

க்ராணம் கந்தாத்மக:பாதுவசனம் யஜ்ஜ ஸம்பவ: |
ஜிஹ்வாம் வாகீச்வர: பாது முகுந்தோ தந்த ஸம்ஹதி:|| 5

ஓஷ்டம் பிரம்ஹாத்மக: பாது பாது நாராயணோ தரம்|
சிவாத்மா சிபுகம் பாது கபோலௌ கமலா பிரபு: || 6

வித்யாத்மா பீடகம் பாது கண்டம் நாதாத்மகோ மம|
புஜௌ சதுர்புஜ: பாது கரௌ தைத்யேந்த்ர மர்தன: || 7

ज्ञानात्मा हृदयं पातु विश्वात्मा तु कुचद्वयम्।
मध्यं पातु सर्वात्मा पातु पीताम्बरः कटिम्॥ 8

कुक्षिं कुक्षिस्थविश्वो मे बलिभद्रो बलित्रयम्।
नाभिं मे पद्मनाभोऽव्याद् गुह्यं गुह्यार्थबोधकृत्॥ 9

ऊरू दामोदरः पातु जानुनी मधुसूदनः।
पातु जङ्घे महाविष्णुर्गुल्फौ पातु जनार्दनः॥ 10

पादौ त्रिविक्रमः पातु पातु पादाङ्गुलीर्हरिः।
सर्वाङ्गं सर्वगः पातु पातु रोमाणि केशवः॥ 11

धातून् नाडीगताः पातु भार्यां लक्ष्मीपतिर्मम।
पुत्रान् विश्वकुटुम्बी मे पातु बन्धून् सुरेश्वरः॥ 12

मित्रं मित्रात्मकः पातु वह्न्यात्मा शत्रुसंहतिः।
प्राणान् वाय्वात्मकः पातु क्षेत्रं विश्वम्भरात्मकः॥ 13

वरुणात्मा रसान् पातु व्योमात्मा हृद्गुहान्तरम्।
दिवारात्रं हृषीकेशः पातु सर्वं जगद्गुरुः॥ 14

विषमे सङ्कटे चैव पातु क्षेमङ्करो हरिः (मम)।
सच्चिदानन्दरूपो मे ज्ञानं रक्षतु सर्वदा॥ 15

प्राच्यां रक्षतु सर्वात्मा आग्नेय्यां ज्ञानदीपकः।
याम्यां बोधप्रदः पातु नैरृत्यां चिद्घनप्रभः॥ 16

विद्यानिधिस्तु वारुण्यां वायव्यां चिन्मयोऽवतु।
कौबेर्यां वित्तदः पातु ऐशान्यां च जगद्गुरुः॥ 17

ऊर्ध्वं पातु जगत्स्वामी पात्वधस्तात् परात्परः।
रक्षाहीनं तु यत् स्थानं रक्षत्वखिलनायकः॥ 18

एवं न्यस्तशरीरोऽसौ साक्षाद्वागीश्वरो भवेत्।
आयुरारोग्यमैश्वर्यं सर्वशास्त्रप्रवक्तृताम्॥ 19

लभते नात्र सन्देहो हयग्रीवप्रसादतः।
इतीदं कीर्तितं दिव्यं कवचं देवपूजितम्॥ 20

***

(अथर्वण मन्त्रखण्डे)

ஜ்ஞானாத்மா ஹ்ருதயம் பாது விச்வாத்மா து குசத்வயம்|
மத்யம் பாது ஸர்வாத்மா பாது பீதாம்பர:கடிம்|| 8

குக்ஷிம் குக்ஷிஸ்த விச்வோ மே பலிபங்கோ பலித்ரயம்|
நாபிம் மே பத்மநாபோ அவ்யாத் குஹ்ய குஹ்யார்த்த
போதகிருதத்|| 9

ஊரு தாமோதர: பாது ஜானுனீ மதுஸூதன:
பாது ஜங்தே மஹாவிஷ்ணுர்குல்பௌ பாது ஜனார்தன: || 10

பாதௌ த்ரிவிக்ரம: பாது பாது பாதாங்குளிர்ஹரி: |
ஸர்வாங்கம் ஸர்வ: பாது பாது ரோமாணி கேச'வ: || 11

தாதுன்னாடிகதா: பாது பார்யாம் லக்ஷ்மிபதிர்மம |
புத்ரான் விச்வகுடும்பி மே பாது பந்தூன் ஸுரேச்வர: || 12

மித்ரம் மித்ராத் மக:பாது வஹ்னயாத்மா சத்ருஸம் ஹதி:|
பிரணாத்வாம் வாத்மக:பாது க்ஷேத்ரம் விச்வம் பராத்மக:||13

வருணாத்மா ரஸாந் பாது வ்யோமாத்மா ஹ்ருத்குஹாந்தரம்|
திவ ராத்ரம் ஹ்ருஷீகேச: பாது ஸர்வம் ஜகத்குரு: || 14

விஷமே ஸங்கடே சைவ பாது க்ஷேமங்கரோ ஹரி: (மம)|
ஸச்சிதானந்த ரூபோ மே ஞானம் ரக்ஷது ஸர்வதா|| 15

பிராச்யாம் ரக்ஷது ஸர்வாத்மா ஆக்னேயாம் ஞானதீபக:|
யார்ம்யாம் வோத பிரத பாது நைர்ருத்யாம் சித்தனப்ரப:|| 16

வித்யா நிதிஸ்து வாருண்யாம் வாயவ்யாம் சிந்மயோவது|
கௌபேர்யாம் வித்த்த: ஐசாந்யாம் ச ஜகத்குரு: || 17

ஊர்த்வம் பாது ஜகத் ஸ்வாமி பாத்வதஸ்தாத் பராத்பர:|
ரக்ஷாஹீனம் து யத் ஸ்தானம் ரக்ஷத்வகில நாயக: || 18

ந்யஸ்த சரீரோஸௌ ஸாக்ஷாத் வாகீச்வரோ பவேத்|
ஆயுராரோக்யம் ஐச்வர்யம் ஸர்வ சாஸ்த்ர பிரவக்த்ருநாம்||19

லபதே நாத்ர ஸந்தேஹோ ஹயக்ரீவ பிரஸாதத: |
இதீதம் கீர்த்திதம் திவ்யம் கவசம் தேவ பூஜிதம்|| 20

***

(அதர்வண மந்த்ர காண்டே)

# श्री लक्ष्मि हयास्य करावलम्बम्

अनादि काल वैभव प्रकाशकाय
कूर्मादीन् दिव्य लोक विरजिताय।
सदाकाल सरसिजा समालिंगिताय
श्री हयास्य मम देहि करावलम्बम्॥ 1

सत्य ज्ञानादि श्रुति प्रतिपाद्याय
आसुरादि संहर वेद संरक्षकाय।
वेदानां स्वयं श्रुति ववक्ताय
श्री हयास्य मम देहि करावलम्बम्॥ 2

याज्ञवाल्क्य महर्षि वन्दित पदाय|
करुणाप्लावित हृदय पीरपूरिताय।
शुक्ल यजुर्वेद स्वयं प्रबोधिताय
श्री हयास्य मम देहि करावलम्बम्॥ 3

शंख चक्र लसत् पाणि सुशोभिताय
चिन्मुद्रा सकित पुस्तक धराय।
चन्द्रमा मध्य प्रभावस्थिताय
श्री हयास्य मम देहि करावलम्बम्॥ 4

श्रीविद्या शुद्धज्ञान प्रबोधिताय
अज्ञान ध्वान्त तिमिर ध्वंसकाय।
षड्त्रिंशत् कलात्मक मूल स्रोताय
श्री हयास्य मम देहि करावलम्बम्॥ 5

# ஸ்ரீ லக்ஷ்மி ஹயாஸ்ய கராவலம்பம்

அனாதி கால வைபவ ப்ரகாசகாய
கூர்மாதின் திவ்ய லோக விராஜிதாயா |
சதாகால சரஸிஜா ஸமாலிகிதாய
ஸ்ரீஹயாஸ்ய மம தேஹி கராவலம்பம்|| 1

ஸத்ய ஜ்ஞானாதி ச்ருதி ப்ரதிபாத்யாய
ஆஸுராதி ஸம்ஹார வேத ஸம்ரக்ஷகாய |
வேதானாம் ஸ்வயம் ச்ருதி வக்தாய
ஸ்ரீஹயாஸ்ய மம தேஹி கராவலம்பம்|| 2

யாஜ்ஞவால்க்ய மஹர்ஷி வந்தித பதாய
கருணாப்லாவித ஹ்ருதய பூரிதாயா
சுக்ல யஜுர்வேத ஸ்வயம் ப்ரபோதிதாய
ஸ்ரீஹயாஸ்ய மம தேஹி கராவலம்பம்|| 3

சங்க சக்ர லஸத் பாணி ஸுசோபிதாய
சிந்முத்ரா ஸகித புஸ்தக தராய|
சந்த்ரமா மத்ய ப்ரபாவஸ்திதாய
ஸ்ரீஹயாஸ்ய மம தேஹி கராவலம்பம்|| 4

ஸ்ரீவித்யா ஸுத்தஜ்ஞான ப்ரபோதிதாய
அஜ்ஞான த்வாந்த திமிர த்வம்ஸகாய|
ஷட்த்ரிம்சத் கலாத்மக மூல ஸ்ரோதாய
ஸ்ரீஹயாஸ்ய மம தேஹி கராவலம்பம்|| 5

विलुप्त मूर्धन्य दुर्लिपीनां विनाशकाय
त्वत चरणारविन्द वन्दितानां कृपा द्रुष्ठाय
सांसारिकं सेतून् स्वयं विराजिताय
श्री हयास्य मम देहि करावलम्बम्॥ 6

धर्मादिपीठ समासीनां वाक्देव्यां वरदां।
दयाधन स्वरूपां त्वम् अज्ञात निग्रहां
विद्या मेदां कलादि संपूर्ण वरप्रदाम्।
श्री हयास्य मम देहि करावलम्बम्॥ 7

कलियुग प्रत्यक्षीकरण दिव्यामल स्वरूपां
श्री पाञ्चरात्र आगम कर्तृ देवानां पराम्।
समानाधिकरण विहिन परदेवतां त्वाम्
श्री हयास्य मम देहि करावलम्बम्॥ 8

करावलम्बन योपि स्तुवानां जनां।
निःशंक प्रापित परमानन्दामृतां॥

-विनीत

- विष्णु प्रिया

***

விலுப்த மூர்த்தன்ய துர்லிபீனாம் வினாசகாய
த்வத சரணாரவிந்த வந்திதானாம் க்ருபா த்ருஷ்டாய
ஸம்ஸாரிகம் ஸேதூன் ஸ்வயம் விராஜிதாய
ஸ்ரீஹயாஸ்ய மம தேஹி கராவலம்பம்|| 6

தர்மாதிபீட ஸமாஸினாம் வாக்தேவ்யாம் வரதாம்
தயாதன ஸ்வரூபாம் த்வம் அஜ்ஞாத நிக்ரஹாம்
வித்யா மேதாம் கலாதி ஸம்பூர்ண வரப்ரதாம்
ஸ்ரீஹயாஸ்ய மம தேஹி கராவலம்பம்|| 7

கலியுக ப்ரத்யக்ஷிகரண திவ்யாமள ஸ்வரூபாம்
ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம கர்த்ரு தேவானாம் பராம்
ஸமானாதிகரண விஹின பரதேவதாம் த்வாம்
ஸ்ரீஹயாஸ்ய மம தேஹி கராவலம்பம்|| 8

கராவலம்பன யோபி ஸ்துவானாம் ஜனாம்
நி:சம்க ப்ராபித பரமானந்தாம்ருதாம் ||

- பணிவுடன்,

- விஷ்ணுப்ரியா

***

# ஆராவமுதே!

**- விஷ்ணு பிரியா**

ஸ்ரீ லக்ஷ்மி ஹயவதன பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸுந்தர தாதார்ய மஹா குரவே நம:

**பக்தாம்ருதம் விச்வ ஜனாநுமோதனம்**
**ஸர்வார்த்தம் ஸ்ரீ சடகோப வாங்மயம்|**
**ஸஹஸ்ர சாகோ பநிஷத் ஸமாகமம்**
**நமாம்யஹம் த்ராவிட வேத ஸாரம்||**

என்பது திருவாய்மொழி தனியன்களிலே முதன்மையானது. திருவாய்மொழி வேதஸாரம், வேத ஸாகரம், எல்லாவிதமான சதுர்வித புருஷார்த்தங்களையும் அளிக்க வல்லது. உபநிஷத்துக்களின் ஆயிரமுடைய கிளைகளின் சேர்க்கை போன்றதெல்லாம் நாமறிவோம். திருவாய்மொழியையும், நாலாயிரமுமே உலகிற்கு நாதமுநிகள் மூலமாய் தந்தருளிய பரமன் திருக்குடந்தை ஊரான் ஸ்ரீ ஆராவமுதனே அல்லவா. ஸர்வ காலமும் அநுபவித்தாலும் திருப்தி வராதபடியான போக்யாதிசயத்தையுடையவன் என ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் திரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்னாவளியில் நம்மாழ்வாரின் அமுதனைப்பற்றிய பத்து பாசுரங்களைத் தலைகட்டி ஸாதிக்கிறார். இன்னும் ஒருபடி மேலாக எம்பெருமானே சேதனனுக்கு ஏக போக்யம் மாற்றது எதுவும் இல்லை என்கிற எண்ணமே அமுதனை ஸேவித்து ஏற்படுகின்ற அனுபவத்தாலேதான் என்கிறார். ஸ்ரீ நம்மாழ்வார் இந்த பத்து பாசுரங்களில் இரண்டாவதாக

எம்மானே! என் வெள்ளை மூர்த்தி! என்னை ஆள்வானே!
எம்மா உருவுக் வேண்டு மாற்றால் ஆவாய் எழிலேறே!

என்று மேலும் கொண்டாடுமிடத்து இரண்டு விசேஷங்கள் குறிப்பிட்டு நோக்கத்தக்கது. விபவாதாரங்கள் எடுக்கையில் ஸ்வஸங்கல்பத்தாலும், ஸ்வேச்சையாக அவதாரங்கள் செய்து துஷ்ட நிக்ரஹ, சிஷ்ட பரிபாலனம் செய்தருளினார் என்பது சாஸ்திர நிர்வாகம். இங்கு ஸ்ரீவைகுந்தத்திலிருந்து எம்பெருமான் திருத்தேருடனேயே திருக்குடந்தைக்கு எழுந்தருளினார் என்பது புராண பிரமாணமாகும். அத்தகைய ஆதிமூர்த்தியை ஆழ்வார் எம்மானே! என் வெள்ளை மூர்த்தி என்றார். நிர்மலன், நின்மலன்,


நீதிவானவன், அசேஷ தோஷ பிரத்யனீக கல்யாணைகதரன ஸ்வரூபன் என்பதெல்லாம் தோஷம் சிறிதேயும் காணக்கிடைக்காததான விமலன் என்பது ஏற்படும். நிவருத்தி தர்மத்தின் தலைவனாக ஸ்ரீ கூர்மாதீந் திவ்யலோகத்தில், தர்மாதி பீடத்தில் எழுந்தருளியிருந்து லீலா விபூதியை நிர்வகிக்கும் பரமன் பரிமுகனே என்பது சாஸ்த்திர விதிதமாகையினாலே ஆழ்வார் பரிமுகனை சுசிப்பிக்கின்றார் என்பது வெளிப்படை. ஏனெனில் அவர்தானே நேராக தேரில் அமுதனாகி திருக்குடந்தையில் எழுந்தருளினார். நின்னையே வேண்டி நீள்செல்வம் வேண்டா பரம பிரயோஜனத்தை வேண்டும் சேதனனை முன் செய்த உபகாரங்களை உத்தேசித்து தன்னிடம் வரக்கூப்பிடுகிறாராம். மோக்ஷ தர்மத்தின் உபாயமாகிற பரிமுகனை இவ்வாறு ஆழ்வார் ஸுசிப்பித்திருக்கிறார்.

திருமங்கை ஆழ்வாரும் பெருமாள் பக்கலிலே ஸர்வார்த்த கிரஹணம் செய்து பரம பிரயோஜனம் பரமனே, அவரை அடைய திருமந்திரமே பற்று என உரைக்கையில் "பெரிய திருமொழி" தொடக்கம் ஏற்படுகிறது. "வாடினேன் வாடி" தொடங்கி 2ம் பாசுரத்திலேயே திருமங்கை ஆழ்வாரும் இதையே ஸாதிக்கிறார்.

ஆவியே அமுதே எனநினைந்துருகி
அவரவர்ப்பணைமுலைதுணையா
பாவியேனுணரா தெத்தனைபகலும்
பழுதுபோயொழிந்தனநாள்கள்,
தூவிசேரன்னம் துணையொடும்புணரும்
சூழ்புனற்குடந்தையேதொழுதென்
நாவினாலுய்யநான் கண்டுகொண்டேன்
நாராயணாவென்னும் நாமம்.

குடந்தை அமுதனை, "தூவிசேரன்னம்" எனக் கூறிப்பிட்டு ஹம்ச ஸ்வரூபனாகிய பரிமுகனையே திருமங்கையாழ்வாரும் ஸுசிப்பிக்கிறார். ஸ்ரீவைகுந்தத்திலிருந்து நேராக அர்ச்சை ரூபம் எடுத்து உலகுய்ய வந்த பரமன் பரிமுகனே என்பது வியக்தமாகவும், முடிவாகவும் ஆழ்வார்கள் அனுபவமாக நமக்குக் காணக்கிடைக்கிறது. அகலகில்லாத பெரிய பிராட்டியாரை தம் பக்கலில் அணைத்து த்வய தியான மூர்த்தியாக ஸர்வ காலமும் ஸேவை சாதிக்கும் ஸ்ரீலக்ஷ்மி ஹயக்ரீவன் தன்னையே பரம ப்ராப்யமாகக் கொண்டு கொண்டாடும் சேதனார்களுக்கு இழிதலில்லாத சாயுஜ்ய பதவியைத் தப்பாது ஈந்தருள்வார்.

***



ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவர்